**+2 வணிகவியல் முதல் இடைப்பருவத் தேர்வு ஜீலை -24**

1.(அ) 1988
2.(ஆ) கரடி
3.(அ) வணிக வங்கி
4.(ஆ) குறைவு
5.(ஈ) கட்டுப்படுத்துதல்
6.(ஈ) பலமுறை
7.(அ) குறுகிய கால நிதியை வழங்குவதில்லை
8.(இ) கடனுறுதி பத்திரங்கள்
9.(இ) குறியிலக்கு மேலாண்மை
10(அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) (A) விற்கு சரியான விளக்கம்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X2=10**

11. **பங்குச் சந்தை** என்பது பெருநிறுவன மற்றும் பிற பத்திரங்கள் வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்கும் ஒரு ஒழுங்கமைப்பட்ட சந்தையாகும்.

12. **அரசுப் பத்திரங்கள் சந்தை:** அரசு அல்லது தங்கமுனை பத்திரங்கள் வாங்கவும் விற்கவும் கூடிய ஒரு சந்தைக்கு அரசுபத்திரங்கள் என்று பெயர்.

13. **மேலாண்மைக் கருவிகள்:** கணக்கியல், வணிகச்சட்டங்கள், உளவியல், புள்ளியியல், பொருளியியல், தரவுச் செயலாக்கம்

14. **முக்கிய முடிவுப் பகுதிகள் (KRA):** முக்கிய முடிவுப் பகுதிகள் என்பது ஒரு அமைப்பின் வலிமையைக் குறிக்கிறது. இலாபம், சந்தை நிலவரம், புதிய கண்டுபிடிப்புகள் போன்றவை முக்கிய முடிவுப் பகுதிகளுக்கு உதாரணங்களாகும்.

15. **உடனடிச் சந்தை:** ஆவணங்களை வழங்கலும் ரொக்கம் பெறுதலும் உடனடியாக நடைபெறும் சந்தை உடனடிச் சந்தை ஆகும். தீர்வு உடனடியாக நடைபெறுகின்றது.

16. **செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.**
பங்குச் சந்தைகளை ஒழுங்குப்படுத்துவது,
முதலீட்டாளர்களின் நலன்களை பாதுகாப்பது.

17. பங்குகள், கடன் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்கி விற்கும் தனிப்பட்ட வியாபாரிகள் **தன்வணிகர்** என்று அழைக்கப்படுகிறார்

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி 5X3=15**

18. **புறத்தோற்ற மற்ற பத்திரங்கள்** முதலீட்டாளார்களின் விருப்பத்திற்கேற்ப நிறுவனப் பதிவாளரால் காகித வடிவிலான பங்குச் சான்றிதழை அழித்து பின்னர் அதற்கு சமமான பத்திரங்கள் முதலீட்டாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்படும். இதுவே புறத்தோற்ற மற்ற பத்திரங்கள் எனப்படும்.

19. **காளை:-** பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊக வணிகர் காளை அல்லது தெஜிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் மனப்பாங்கு கொண்டவர்.
**கரடி:-** எதிர்காலத்தில் குறிப்பிட்ட பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுபவர். கரடி அல்லது மண்டிவாலா என்று அழைக்கப்படுகிறார். இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

20. **கருவூல இரசீதின் பொது இயல்புகள் யாவை?**
வெளியிடுபவர், நிதி இரசீது, நீர்மைத் தன்மை, முக்கிய ஆதாரம், பண மேலாண்மை

21. **மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.** திட்டமிடல், அமைப்பாற்றல், பணியமர்த்தல், இயக்குவித்தல், செயலூக்கமளித்தல், கட்டுப்படுத்துதல், ஒருங்கிணைத்தல்

22. **குறியிலக்கு மேலாண்மையின் இயல்புகளை**
சமுதாய குறிக்கோள்களுடன் அமைப்பின் குறிக்கோள்களை தொடர்புபடுத்துதல்.
நோக்கத்தை மாற்ற அதிகாரத்துடன் இருப்பவர்களுடன் ஆலோசனை செய்கிறது,
நம்பிக்கை, நல்லெண்ணம் மற்றும் விருப்பத்திற்கேற்ப செயல்படுவதற்குரிய ஒரு சூழலை ஊக்குவிக்கிறது.

23. **இரண்டாம் நிலைச் சந்தை பற்றி சிறு குறிப்பு வரைக.**
ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை இரண்டாம் நிலைச் சந்தை ஆகும்.
இதில் பங்கு மாற்றகம் ஒரு முக்கியமான நிறுவனம் ஆகும்.
நிதி கோருதலின் வெளியீட்டுக் கால அடிப்படையில் செயல்படும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**24.** ஏந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள், சொத்துக்கள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதி கருவிகள் வியாபாரம் செய்யப்படுகிறதோ அதுவே **நிதி சந்தை** ஆகும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 2X5=10**

**25.அ. நவீன மேலாண்மைக் கோட்பாடுகள்:**

**வேலைப்பகிர்வு:-** தொழிலமைப்பின் மொத்த பணிச்சுமையும் பகிர்வு செய்யப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறை:-** கீழ்படிதல் முறைப்படி நடத்தல், அதிகாரத்தை மதித்தல் ஆகியவை நிறுவனம் நன்கு நடைபெற அவசியம் ஆகும்.

**கட்டளையொருமை:-** ஒவ்வொரு கீழ் பணியாளரும் ஒரே ஒரு மேலதிகாரிடமிருந்து மட்டுமே கட்டளைகளை பெற வேண்டும்.

**ஆணையுரிமை வரிசை:-** ஆணையுரிமையின் வரிசை உயர்மட்ட அலுவலரிடமிருந்து கீழ் மட்டத்தில் உள்ள பணியாளர் வரை படிப்படியாக கீழ்நோக்கி வர வேண்டும்.

**ஊதியம்:-** ஊதியம் என்பது பணியாளர்களின் பணிக்கு கொடுக்கப்படும் விலையாகும்.

**25 ஆ. செபியின் பணிகளை விவரி**

போதுமான கல்வி மற்றும் வழிகாட்டல் மூலம் முதலீட்டாளர்களின் நலனை பாதுகாக்கிறது.

பங்குச் சந்தைகளில் வியாபாரத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல்.

பத்திரங்களில் உள்வழி வர்த்தகத்தை தடை செய்கிறது.

நிதி இடைத்தரகர்களுக்கு பொருத்தமான பயிற்சி அளித்தல். மத்திய அரசால் வழங்கப்படும் செயல்பாடுகளை செயல்படுத்துதல்.

| **26. அ. தன்மைகள்** | **பணச் சந்தை** | **மூலதனச் சந்தை** |
|---|---|---|
| நிதியின் காலம் | ஒரு வருட காலத்திற்குள் அதாவது குறுகிய காலச் சந்தை | ஒரு வருட காலத்திற்கும் மேல் அதாவது நீண்ட காலச் சந்தை |
| வணிக ஆவணங்கள் | வணிக இரசீதுகள், மாற்றுமுறை ஆவணங்கள், கருவூலச் சீட்டு, வணிகத்தாள் போன்றவை | பங்குகள், கடனீட்டுப் பத்திரங்கள், அரசுப் பத்திரங்கள் |
| பண மதிப்பு | ஒரு கருவூல இரசீதின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 1 இலட்சம் வைப்புசான்றிதழ் மற்றும் வணிகத்தாளின் குறைந்தப்பட்ச மதிப்பு ரூ25 இலட்சம் | ஒரு பங்கின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 10 ஒரு கடனீட்டுப் பத்திரத்தின் குறைந்தபட்ச மதிப்பு ரூ 100 |
| இடர் அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அளவு | கடன் மற்றும் சந்தை ஆபத்து குறைந்த அதிக அளவு |
| ஒழுங்குபடுத்தும் அமைப்பு | மையவங்கி | மைய வங்கி மற்றும் செபி |

**26.ஆ. பங்குச் சந்தை பணிகளை விவரி.**

**உடனடி மற்றும் தொடர்ச்சியான சந்தை:-** ஒரு முதலீட்டாளர் தனது ஏற்கனவே வெளியிட்ட பத்திரங்களை எளிதில் விரைவாக பங்கு சந்தைகளில் விற்கலாம்.

**பத்திரங்கள் மதிப்பீடு:-** பத்திரங்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்யப்படும் விலை பதிவு செய்யப்பட்டுப் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்றன.

**முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பு:-** பங்குச் சந்தையில் முதலீட்டாளர்களுக்கு நியாயமான அளவீடு மற்றும் நடவடிக்கைகளை வழங்குகிறது.

**மூலதனத்தை சரியாக வழிப்படுத்துதல்:-** மக்கள் நல்ல இலாபத்தை ஈட்டக் கூடிய நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்தல்.

**மூலதன உருவாக்கம்:-** ஒரு நிலையான மூலதனத்தை தொழிற்துறையில் உறுதிப்படுத்துகிறது.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com